# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 03 புதன்கிழமை 18.12.2024 கதிர் 84



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# தமிழர்களுக்காக நெஞ்சில் குண்டு ஏந்தவும் தயார்!

## நாடாளுமன்றத்தில் அர்ச்சுனா வீராவேசம்!



(கொழும்பு, டிச.18)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் அதன் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி பற்றி அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா, நீதிமன்ற வழக்குகள் என்ன, தமிழ் மக்களுக்காக நெஞ்சில் குண்டு ஏந்தவும் தயாராகவே இருக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

7

## அர்ச்சுனாவுக்கு எதிராக வழக்கு!

(யாழ்ப்பாம், டிச. 18)

நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அவதூறு வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனக்கு ஏற்பட்டுள்ள அவதூறுக்கு எதிராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி ரூபா நூறு மில்லியன் மானநஷ்டம் கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

நாமலின் சட்டத்தரணிப் பதவி

## குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன் எனச் சபதம்!

(கொழும்பு, டிச. 16)

சட்டக் கல்லூரிப் பரீட்சைக்குத் தான் தோற்றிய விதம் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின், அவை தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், தனது கல்வித் தகைமை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தன் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட முடியாமல் போனால் அவற்றை முன்வைத்த அமைச்சர் வசந்த சமரசிங்க தனது அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும் எனவும்

7

## நிசாம் காரியப்பர் பதவிப் பிரமாணம் !

(கொழும்பு, டிச. 18)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

7

## கெஹெலியவின் கணக்குகள் முடக்கம்!



(கொழும்பு, டிச 18)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வங்கிக் கணக்குகள் இரண்டை முடக்கி வைக்குமாறு இலஞ்ச

7

## பெப்ரவரி முதல் வாரம் வாகன இறக்குமதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு!

(கொழும்பு, டிச. 18)

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை அடுத்து 2022 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருக்கும் வாகன இறக்குமதியைக் கட்டங்கட்டமாக அனுமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

7

## நாட்டுக்கு எதிராக எந்த ஒரு விடயமும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவில்லை!

- வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு -

(கொழும்பு, டிச. 18)

நாட்டுக்கு அச்சுறுத்தலான எந்தவொரு உடன்படிக்கையையும் இந்தியாவுடன் தற்போதைய அரசாங்கம் கைச்சாத்திடவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியா தொடர்பிலும், எட்கா தொடர்பிலும்

7








இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு இன்று 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களால் மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் வைத்து தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-09)

# சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்தி பற்றி நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆளுநருடன் பேச்சு!



(சாவகச்சேரி, டிச.08)
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி அ.சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரண, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ் ஆகியோருடன், நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ஜ-05)

## வாழ்வாதாரத்தை இழந்துள்ள கிழக்கு கடற்றொழிலாளர்கள்

(கொழும்பு, டிச 18)
சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள கடற்றொழிலாளர்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதுவித வருமானமும் இன்றி தாம் பெரிதும், கஷ்டப்படுவதாகவும் நிவாரணங்களை வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களின் தோணிகள் வள்ளங்களை தற்போது கடல் பேரலையிலிருந்து காப்பாற்றும்முகமாக கட்டி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், தொடர்ந்தும் கரையோர பிரதேசங்கள் கொந்தளிப்பாக காணப்படுவதனால் கடற்றொழிலாளர்கள் அதிக நாட்கள் தொழில் இன்றி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தினால் தங்களுக்கு நிவாரணங்கள் வழங்க உதவி செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ)

## இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் காற்றழுத்த தாழ்வு

(கொழும்பு, டிச 18)
தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்தப் பிரதேசம் தற்போது இலங்கைக்குக் கிழக்காக நிலை கொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி அது படிப்படியாக விருத்தியடைந்து மேற்கு - வட மேற்குத் திசையில் நகரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் தாக்கம் காரணமாக இன்றைய தினம் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஜ)



## அரச நிதி பற்றிய தெரிவுக் குழுவுக்குத் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமனம்!



(கொழும்பு, டிச 18)
அரசாங்க நிதி பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கூடிய நாடாளு மன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தின் போது, நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2024 டிசம்பர் 06ஆம் திகதி நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும், அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பணியாற்றுவதற்கான ஏனைய உறுப்பினர்களின் பெயர்களையும் சபாநாயகர் இன்று புதன்கிழமை சபையில் அறிவித்தார்.

இதற்கமைய, ஹர்ஷண சூரியப்பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேஸ்ரீ பஸ்நாயக்க, திலிண சமரகோன், சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர ஆகிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஜ-05)

## லயன் குடியிருப்பில் தீப்பரவல்



(கொழும்பு, டிச 18)
திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம், கே.ஓ பிரிவில் 10 வீடுகள் கொண்ட 6ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்பில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இன்று காலை இடம்பெற்ற இந்த தீப்பரவலில் ஒரு வீடு முற்றாக எரிந்துள்ளதுடன், ஏனைய மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 22 பேர் தற்காலிகமாக உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீப்பரவல் ஏற்பட்ட போது வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டதாகவும், அதன் பிறகு அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீட்டில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், ஆடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

மேலும், இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பாக திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்திற்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீப் பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## வரி விலக்கு எல்லை குறைப்பு!




(கொழும்பு, டிச. 18)
மாதாந்த வருமானத்துக்கு எதிராக அறவிடப்படும் "பேயி" வரி விலக்குக்கான எல்லை ரூபா ஒரு இலட்சத்திலிருந்து, ரூபா ஒன்றரை இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரை ஆற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச நாணய நிதியத்துடனான மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் போது, தொழில் வல்லுநர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதன் படி, வருமான வரி எல்லை ஒரு இலட்சத்திலிருந்து, ரூபா ஒன்றரை இலட்சமாகக் குறைக்க முடிந்தது" என்றார். (ஜ)

# ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட பகிரங்க அறிவிப்பு



கொழும்பு , டிச. 18

எதிர்வரும் 2028ஆம் ஆண்டும் தமது அரசாங்கமே ஆட்சியை அமைக்கும்என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றை நாடாளுமன்றிற்கு விடுத்து இன்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

2028ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், 2022ஆம் ஆண்டு இடம்பெறும் நிலைமை மீண்டும் நாட்டில் ஏற்படாது எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் இன்றைய (18) நாளுக்கான நாடாளுமன்ற அமர்வுகள் சற்று முன்னர் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஜனாதிபதி நாடாளுமன்றிற்கு வருகைத்தந்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வுகள் சபாநாயகர் ஜெகத் விக்ரமரத்ன தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது, முதலாவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக நிசாம் காரியப்பர் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (ஐ)

# கைத்துப்பாக்கி வடிவத்தில் இரத்தினக்கல்

கொழும்பு , டிச. 18

இரத்தினபுரி எலபாத்த பிரதேசத்திலுள்ள இரத்தினக்கல் சுரங்கத்தில் கைத்துப்பாக்கி போன்ற வடிவிலான இரத்தினகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவருக்கு சொந்தமான தனியார் அருங்காட்சியகத்தில் குறித்த கல் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்துப்பாக்கி வடிவ இரத்தினக்கல் சில வாரங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டதாக உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி எலபாத்த பிரதேசத்தில் உள்ள சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட இளஞ்சிவப்பு நீலக்கல் மாணிக்கக்கல் கைத்துப்பாக்கி வடிவில் உள்ளது.

இரத்தினபுரி மாணிக்க அருங்காட்சியகத்தின் உரிமையாளரான நந்தன இந்த கல்லை கொள்வனவு செய்துள்ளார். இது 10.20 கரட் எடை கொண்டதாகும்.

உலகின் மாணிக்க கல் நகரமாக இரத்தினபுரி இருப்பதால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இரத்தினபுரிக்கு வரவழைத்து அவர்களுக்கு இரத்தினக்கற்களை விற்பனை செய்வதற்காக இவ்வாறான தனித்துவமான மாணிக்க கற்களை சேகரித்து அருங்காட்சியகம் நடத்தப்படுவதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இப்போதும் இரத்தினபுரி பகுதியில் இரத்தினக்கல் வியாபாரிகளால் பல தனியார் இரத்தினக்கற்கள் அருங்காட்சியகங்கள் நடத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (ஐ)

# புலமைப்பரிசில் பரீட்சை குறித்து நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு



*கொழும்பு , டிச. 18*

*அண்மையில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று கேள்விகள் கசிந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதன்படி நாளை) காலை 9.00 மணிக்குள் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம்பணிப்புரை விடுத்துள்ளது.*

*முன்னதாக, கடந்த 16ஆம் திகதி தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையைமீண்டும் நடத்துவதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமனுக்கள்உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*குறித்த அடிப்படை உரிமை மனுக்கள் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(ஐ)*



# மிதி வெடி

"ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி கண்ணே.." எண்ட பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பியள். நேராப் பட்டு, உணர்ந்திருக்கிறேளே? இவ்வளவு நாளும் உவையள் எல்லாரும் உத்தமர்கள் உண்மைய மட்டும் தான் பேசினவை எண்டு நம்பியிருந்த சனமெல்லாம் காறாப்பித் துப்பத் தொடங்கிற்றுதுகள் பாருங்கோ.....

போன கிழமை பெரிய பள்ளிக்கூடத்தில ஒரு தேர்தல் நடந்ததாம்... அந்தக் கதையையச் சொன்ன ஒருத்தர் இப்பிடித் தான் எனக்குச் சொன்னவர்... உவை படிச்சவை எண்டு சொல்லுறதுக்கு எந்த அருகதையும் இல்லையாம்....

படிப்பிக்கிறவைக்கு எண்டு ஒரு சங்கம் இருக்குதாம்... அவையள் இருந்திருந்துட்டு நித்திரையால எழும்பி அறிக்கை எல்லாம் விடுறவையாம்... அவையின்ர சங்கத்துக்கு நிர்வாகத்தைத் தெரிவு செய்யுற தேர்தல் தான் போன கிழமை நடந்ததாம்....

தாங்கள் செய்யுறதுக்கெல்லாம்... "பூம்... பூம்.." போலத் தலையாட்டுறதுக்கு ஒரு "டம்மி" தலைவரைக் கதிரையில இருத்திப் போட்டு, அவரை வைச்சுக் கொண்டு அரசியல் செய்ய வெளிக்கிட்டவையாம்.... ஆனா... "எதைச் செய்தாலும்.. ப்ளான் பண்ணிச் செய்ய வேணும்" எண்டு வடிவேல் சொன்னதை மறந்து போய், அடிப்படை அங்கத்துவமே இல்லாத ஒருத்தரை வச்சுத் தலைவரை முன்மொழியப் போய் வாங்கிக் கட்டிக் கொண்டு நிக்கினமாம்...

உவையள் கொண்டு வர வெளிக்கிட்ட ஆளும் பலே கில்லாடி பாருங்கோ.... அங்க அவற்றை பீடம் சரியா இயங்க விடக் கூடாது எண்டுறதில எப்பவுமே குறியா இருப்பாராம்... கொஞ்சக் காலத்துக்கு முன்னம் அயல்நாட்டுத் தூதரகத்தை வச்சு அதட்டி - உருட்டி அரசியல் செய்தவருக்கு இப்ப அங்க காத்துப் புடுங்குப்பட்டுட்டுதாம்... அதால தன்ர வித்துவத்தைக் காட்டுறதுக்கு வழி தேடிக் கொண்டிருந்தவராம்.....

இவையள் இங்க முழுக் "கம்பஸ்"உம் இயங்க விடாமல் குழப்ப வேணும் எண்டதில குறியா இருக்க.... அவர் அங்க தான் இருக்கிற "பகல்டி" சரியா இருக்க விடக் கூடாது எண்டு குழப்பியடிக்கிறது தான் வேலையாம்....

அப்பச் சரியாத் தானே இருக்கும்? குட்டையக் குழப்புறதில "சாடிக்கேத்த மூடி" கணக்கான ஆளைத் தான் தலைவராக்க வேணும் எண்டு தேடிப் பிடிச்சு.... போதாக்குறைக்கு அவருக்கு வாக்குப் போடுறதுக்காக "பஸ்" ஒண்டில ஆக்களை அள்ளிப் போட்டுக் கொண்டும் வந்திருக்கினம்.... வழமையா சங்கக் கூட்டம் எண்டால், அங்காலப் பக்கமே எட்டிப் பாக்காத மருதனார்மட ஆக்கள் தான் அண்டைய கூட்டத்துக்கு அதிகமா வந்திருந்தவையாம்...

வாக்களிக்கிறதுக்கு ஆக்களைக் கொண்டந்தவை, வாக்குரிமையே இல்லாத ஒருத்தரை வச்சு வேட்பாளரைப் பிரேரிச்சதில மாட்டுப்பட்டுப் போட்டினமாம்....

பொதுவா ஒரு தேர்தல் எண்டு சொன்னா... ஒரு வேட்பாளர் தகுதி இழந்தா மற்றவர் தானே பதவிக்கு வர வேணும்? தேர்தல் ஒழுங்கு எண்டதும், கனவான் தனம் எண்டதும் அது தானே?

தேர்தலுக்குத் தலைமை தாங்கினவர் நேர்மையா போட்டியிட்ட மற்றவர் தான் பதவிக்கு வரவேணும் எண்டு சொல்ல வெளிக்கிட.... நேர்மையான தேர்தல் எண்டால் என்ன எண்டு பொதுவெளியில மக்களுக்கு வகுப்பெடுத்தவை எல்லாருமாச் சேர்ந்து குழப்பியடிச்சுப் போட்டினமாம்.... மறு தேர்தல் வைக்க வேணும் எண்டு அலாப்பி அடிச்சுக் கொண்டு, தேர்தல் வைச்சவர் தன்ர கருத்தைச் சொல்லுறதுக்குக் கூட அவகாசம் குடாமல் வெளிக்கிட்டு ஓடிற்றினமாம்....

எப்பிடியிருக்குது பஞ்சாயத்து? நாட்டில ஒரு தலைவரைத் தெரியுறதுக்கும், நாடாளுமன்றத்துக்கு ஆக்கள அனுப்புறதுக்கும் தேர்தல் வைச்சா அது நேர்மையா நடக்க வேணும், ஊழல் இல்லாதவர்கள் ஆட்சிக்கு வரவேணும் எண்டு பகிரங்கமாக் கதைக்கிறவைக்குத் தங்களுக்கெண்டு ஒரு "ரப்பர் ஸ்ராம்ப்" தலைவரைத் தெரிவு செய்யேக்க மட்டும் "நேர்மையா.... அப்பிடி எண்டால்? - அது கிலோ என்ன விலை?" எண்டு கேக்க வைக்குது போல.... ?

ஆ... ஊ... வெண்டு.. அங்க நக்கி... இங்க மேய்ஞ்சுகொண்டு திரிஞ்சவை... அனுரா ஆட்சிக்கு வந்ததும் "அந்தர் பெல்டி" அடிச்சு தாங்கள் மட்டும் தான் நேர்மையானவை எண்டு அறிக்கை விட்டவையெல்லே? போதாக் குறைக்கு "பிரஸ் கிளப்" ல பேட்டி கூடக் குடுத்தவை... தேர்தல் முடிஞ்சு, ஆட்சிக்கு வந்ததுக்குப் பிறகு தான், "என்.பி.பி" காரருக்கே இவையளைப் பற்றி விளங்கினதாம்...

தேர்தல் முடிஞ்ச சூடு அடங்கிறதுக்குள்ளயே ஆளாளுக்குப் போய் "டிமாண்ட்" பண்ணினதை வச்சே இவையளைப்பற்றி "என்.பி.பி" காரர் நல்லா மதிச்சுட்டினமாம். தெற்கில ஒரு பல்கலைக்கழகத்தின்ர தலைமையைத் தூக்கின உடன போய், யாழ்ப்பாணத்திலயும் "கம்பஸ்" உள்ளுக்குள்ள புகைஞ்சு கொண்டு தான் இருக்குது. கதிரையில இருக்கிறவரைத் தூக்கிக் கடாசி விடுங்கோ எண்டு கேட்டதோடய இவையளைப் பத்தி நல்லா விளங்கிக் கொண்டிச்சினமாம்....

அப்பப் பாருங்கோவன்.... "சோழியன் குடுமி சும்மா ஆடாது" எண்டது சரிதானே?

–நரமுனி–

# குகேஷ் பரிசுத் தொகைக்கு ரூ.4 கோடி வரியா? மத்திய அரசுக்கு காங்கிரஸ் எம்.பி. சுதா கடிதம்!

சிங்கப்பூரில் உலக செஸ் சாம்பியன் போட்டி நடந்து முடிந்துள்ளது. இதில் இந்தியா சார்பில் பங்கேற்ற தமிழக வீரர் குகேஷ் சீன போட்டியாளரான லிங்கை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை பெற்றார். இதன்மூலம் 18 வயதில் உலக சாம்பியன் பெற்ற இளம் வீரர் என்ற பெருமையும் அவருக்கு கிடைத்துள்ளது.

இந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற குகேஷ் சுமார் ரூ. 11 கோடி பரிசுத் தொகையை வென்றுள்ளார். அதாவது இந்த தொடரின் மொத்த பரிசுத்தொகை ரூ.21 கோடி. போட்டியின் விதிமுறைப்படி 13 சுற்றுகளில் யார் முதலில் 6.5 புள்ளிகளைப் பெறுகிறார்களோ அவர்களே வெற்றியாளர்களாகக் கருதப்படுவார்கள். விதிமுறைகளின்படி, ஒவ்வொரு வெற்றிக்கும் அந்த வீரருக்கு சுமார் ஷூ.1.68 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்படும். மீதமுள்ள தொகை இருவருக்கும் சரிசமமாகப் பிரித்து வழங்கப்படும்.

அந்த வகையில், குகேஷ் மொத்தம் மூன்று வெற்றிகளைப் பெற்று இருந்த நிலையில் அவருக்கு



ஷூ.5.04 கோடி பரிசுத் தொகை கிடைத்தது. டிங் லிரன் இரண்டு வெற்றிகளைப் பெற்ற நிலையில், அவருக்கு ஷூ. 3.36 கோடி கிடைத்தது. மீதமுள்ள பரிசுத் தொகை இருவருக்கும் இடையே சரி சமமாகப் பிரித்துத் தரப்பட்டது. இதன் மூலம் குகேஷ் இந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி மூலமாக ரூ. 11.34 கோடியைப் பரிசுத் தொகையாகப் பெற்று இருக்கிறார்.

இந்த முழு தொகையில் குகேஷ் ஷூ.4 கோடியை வரியாக செலுத்துகிறார் என்று தகவல் பரவியது. இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் எம். பி. சுதா கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

குகேஷ் பரிசுத் தொகையான ஷூ.11.34 கோடியில் ஷூ.4 கோடியை வரியாக செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் அரசு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கியது போல், வரிச்சலுகை வழங்கினால் இளம் வீரர்களை ஊக்குவிப்பதாக அமையும். மேலும் பாராளுமன்றத்தில் உலக செஸ் சாம்பியன் குகேஷின் சாதனையை பாராட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று சுதா வலியுறுத்தி உள்ளார்.

முன்னதாக, உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற குகேஷ்க்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வரும் நிலையில், தமிழக அரசு சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் குகேஷ்க்கு 5 கோடி ஷூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் ரூ.1 கோடி அபராதம் விதிக்கும் மத்திய அரசு




பல்வேறு விமான நிறுவனங்களைச் சேர்ந்த விமானங்களுக்கு அவ்வப்போது வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து நடைபெறும் சோதனையால் பயணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர்.

இதனையடுத்து பலமணி நேரம் நடைபெறும் சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் வதந்தி என்று தெரிய வருகிறது. இதனால் பல விமானங்களின் சேவைகளில் மாற்றமும் தாமதமும் ஏற்பட்டது. இதனை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தால் ரூ.1 கோடி வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.1 கோடி வரை அபராதம் விதிக்கும் வகையில் விமான பாதுகாப்பு விதிகளில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் 600-க்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட நிலையில் இருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.. அம்பேத்கர் - அமித்ஷா சர்ச்சைக்கு மோடி பதிலடி!



நேற்றைய நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது மாநிலங்களவையில் பேசிய அமித்ஷா, 'அம்பேத்கர்.. அம்பேத்கர்.. அம்பேத்கர்' என முழக்கமிடுவது இப்போது பேஷன் ஆகிவிட்டது.

இதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்திலாவது அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்என்று கூறினார்.

இந்த கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து ராகுல்காந்தி தலைமையில் நாடாளுமன்றத்தில் இன்று போராட்டம் நடத்தினர். அவையிலும் எம்.பிக்கள் ஜெய் பீம் கோஷம் எழுப்பியதால் இரு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக் கப்பட்டது.

இந்நிலையில் அமித்ஷாவின் கருத்துக்கு பிரதமர் மோடி பதிலளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டதாவது,

காங்கிரசும் அதன் அழுகிய கட்டமைப்பும் தங்கள் தீய பொய்களால் பல ஆண்டுகளாகத் தங்கள் தவறுகளை மறைக்க நினைக்கிறார்கள். குறிப்பாக டாக்டர் அம்பேத்கரை அவமதித்ததை, இந்த பொய்கள் மூலம் மறைக்க முடியும் என்று அவர்கள் நினைத்தால், அது முற்றிலும் தவறான நினைப்பு.

ஒரு குடும்பத்தின் தலைமையில் ஒரு கட்சி, டாக்டர் அம்பேத்கரின் மரபை அழிக்கவும், எஸ்.சி.ஃஎஸ்.டி. சமூகங்களை அவமானப்படுத்தவும் சாத்தியமான அனைத்து மோசமான தந்திரங்களிலும் ஈடுபடுவதை இந்திய மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## கேரளாவில் 36 மருத்துவர்கள் பணி நீக்கம்: மாநில சுகாதாரத்துறையின் அதிரடி நடவடிக்கை!

கேரள மாநிலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகள் செயற்பட்டு வருகின்றன. குறித்த மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களில் பலர், பணிக்கு வராமல் தொடர்ந்து விடுப்பில் இருந்து வருகின்றனர்.

இது தொடர்பாக மாநில சுகாதாரத்துறைக்கு புகார்கள் வந்ததன் பேரில் பணிக்கு வராமல் இருப்பதற்காக விளக்கத்தை தெரிவிக்குமாறு சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு சிலரை தவிர பெரும்பாலானோர் பதிலளிக்காமல் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் உரிய அனுமதி பெறாமல் பணிக்கு வராமல் இருந்த 36 அரசு மருத்துவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 33 மருத்துவர்கள் சுகாதாரப்பணிகள் இயக்குனரும், 3 மருத்துவர்களை மருத்துவக் கல்வி இயக்குனரும் பணி நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட மருத்துவர்கள் அனைவரும் பல ஆண்டுகளாக பணிக்கு வராமல் இருந்தது மட்டுமின்றி, துறை ரீதியாக கேட்கப்பட்ட விளக்கத்திற்கு எந்த பதிலும் அளிக்காமல் இருந்துள்ளனர். இதனால் அவர்கள் மீது இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இவர்கள் தனியார் துறைகளில வேலை கிடைத்து சென்றிருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்கு சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் அவர்கள் அது தொடர்பாக எந்த தகவலும் கொடுக்காமல் இருக்கிறார்கள். துறை வெளியிட்ட காரண அறிவிப்பிற்கு பதிலளிக்காத மேலும் 17 மருத்துவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

இதேபோன்று மருத்துவக் கல்வி இயக்குனரகத்தின் கீழ் மருத்துவர்கள் உட்பட 337 பேர் அனுமதியின்றி பணிக்கு வராமல் இருக்கின்றனர். அவர்களில் 291 பேருக்கு பணிக்கு வராமல் இருப்பதற்காக காரணத்தை கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாளை மறுநாள் முதல் ஐதராபாத்-பெங்களூருக்கு இடையிலான விமான சேவை மீண்டும் ஆரம்பம்!

புதுச்சேரியில் இருந்து நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) முதல் ஐதராபாத், பெங்களூருக்கு விமான சேவை தொடங்கப்பட உள்ளது.

புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள விமான நிலையத்திலிருந்து பெங்களூரு, ஐதராபாத் பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வந்த ஸ்பைஸ்ஜெட் விமான சேவை கடந்த மார்ச் மாதம் 30-ந் திகதியுடன் நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் புதுச்சேரியில் இருந்து மீண்டும்விமான சேவையை தொடங்க இண்டிகோ நிறுவனம் முன்வந்து அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

புதுச்சேரி விமான நிலையத்தில் இண்டிகோ நிறுவன சேவைக்காக பிரத்தியேக அலுவலக அறைகள், தொழில்நுட்ப அறைகள், இண்டிகோ நிறுவனம் ஊழியர்கள் பணியாற்றுவதற்கான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு விமான சேவை தொடங்க அனைத்து ஏற்பாடுகளும் முடிந்துள்ளது.

புதுவையில் இருந்து நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) முதல் மீண்டும் விமான சேவை தொடங்கப்பட உள்ளது. அதன்படி தினமும் காலை 11.10 மணிக்கு பெங்களூருவில் இருந்து புறப்படும் விமானம் மதியம் 12.25 மணிக்கு புதுச்சேரி வந்தடையும். மதியம் 12.45 மணிக்கு புதுச்சேரியில் இருந்து புறப்படும் விமானம், மதியம் 2.30 மணிக்கு ஐதராபாத் சென்றடையும்.

அங்கிருந்து 3.05 மணிக்கு புறப்பட்டு மாலை 4.50 மணிக்கு புதுச்சேரி வந்தடையும். புதுவையில் இருந்து 5.10 மணிக்கு புறப்படும் விமானம் மாலை 6.35 மணிக்கு பெங்களூரு சென்றடையும். இதில் சுமார் 70 பேர் வரை பயணம் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இண்டிகோ நிறுவனத்தை சேர்ந்தவர்கள் நேற்று காலை சட்டசபை வளாகத்திற்கு சென்றனர். அங்கு முதல்-அமைச்சர் ரங்கசாமியை சந்தித்து புதுச்சேரியில் இருந்து மீண்டும் விமான சேவை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தனர்.

இதன்போது அமைச்சர் லட்சுமிநாராயணன், கலெக்டர் குலோத்துங்கன் ஆகியோர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# எலிக்காய்ச்சல்: மழைக்கால ஆபத்து!

மழைக்காலம் என்பது பலருக்கும் இனிமையான காலம் என்றாலும், சில ஆபத்துகளையும் தன்னுடன் கொண்டு வருகிறது. அவற்றில் ஒன்றுதான் எலிக்காய்ச்சல்.

எலிக்காய்ச்சல் என்பது எலிகளிலிருந்து பரவும் ஒரு வகை காய்ச்சலாகும். இது லெப்டோஸ்பைரோசிஸ் என்ற பக்றீரியா காரணமாக ஏற்படுகிறது. இந்த பக்றீரியா பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீரின் மூலம் வெளியேறி, நீர் தேங்கும் இடங்களில் பரவுகிறது.



### இலங்கையில் எலிக்காய்ச்சலின் தாக்கம்

இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இம்முறை,


குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எலிக்காய்ச்சல் தொற்று அதிகமாக ஏற்பட்டுள்ளது.. வடமாகணத்தில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வருடத்தில்மட்டும் நாடு முழுவதும் இதுவரை பத்தாயிரம் பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

### எலிக்காய்ச்சல் பரவும் விதம்

- தொற்றுநீர்: பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீர் கலந்த நீரை தொடும்போது அல்லது குடிக்கும்போது.
- தோல் காயங்கள்: தோலில் ஏற்படும் காயங்களமூலம்.
- கண்கள்: தொற்றுநீர் கண்களில் படும்போது.

### எலிக்காய்ச்சலின் அறிகுறிகள்:

- காய்ச்சல்
- தலைவலி
- உடல் வலி
- கண் சிவப்பு
- வாந்தி
- மஞ்சள் காமாலை



### எலிக்காய்ச்சலை தடுக்கும் முறை :

- தொற்றுநீரைத் தவிர்க்கவும்:
- நீர் தேங்கிய இடங்களில் செல்ல வேண்டியிருந்தால் காலணிகள் அணியவும்.
- திறந்த வெளியில் உள்ள நீரை குடிக்க வேண்டாம்.
- தோல் காயங்களைக் கவனியுங்கள்.
- தோலில் ஏற்படும் காயங்களை சுத்தமாக வைத்திருங்கள்.
- தொற்றுநீர் கண்களில் படாமல் பார்த்துகொள்ளுங்கள்.
- சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருங்கள்:
- எலிகளின் நடமாட்டத்தை தடுக்கவும்.
- மழைக்காலத்தில் பாதுகாப்பு உடைகள் அணியவும்.

### எலிக்காய்ச்சல் வந்தால் செய்ய வேண்டியது.

- உடனடியாக மருத்துவரை அணுகவும்.
- மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை எடுக்கவும்.

மழைக்காலத்தில் எலிக்காய்ச்சல் பரவுவதை தடுக்க சில எளிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். மேலும், எலிக்காய்ச்சலின் அறி-குறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை அணுக வேண்டும். நோய் பரவும் இடங்களில் வசிப்பவர்களும், நோய் தாக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளவர்களும் முன்னெச்சரிகையாக மருந்து களை முதலிலேயே எடுத்துக் கொள்ள வேண்டும்.

# இந்தியாவுடன் வரி விதிப்பில் பரஸ்பரம்..

# குண்டை தூக்கிப் போட்ட டிரம்ப்!



அமெரிக்க அதிபராக அடுத்த மாதம் பதவியேற்விருக்கும் டொனால்டு டிரம்ப், இந்தியாவுக்கு வரி விதிப்பது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து கேயூத்து தெரிவித்த அவர் இந்தியா சில அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கிறது. இதனால் அமெரிக்காவும் இந்திய பொருட்களுக்கு அதிக வரி வசூலிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

"அவர்கள் எங்களுக்கு வரி விதித்தால், அவர்களுக்கு அதே அளவு வரி விதிக்கிறோம். அவர்கள் எங்களுக்கு வரி விதிக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு வரி விதிக்கிறோம். அனைத்து விதங்களிலும் அவர்கள் எங்களுக்கு வரி விதிக்கின்றனர், ஆனால் நாங்கள் அவர்களுக்கு வரி விதிப்பதில்லை," என்று டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய டிரம்ப், "பரஸ்பரம் என்ற சொல் மிக முக்கியமானது. இந்தியா எங்களுக்கு 100 சதவீதம் கட்டணம் வசூலித்தால், நாங்களும் அதுபோல் அவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றோமா? அவர்கள் ஒரு சைக்கிளை அனுப்புகிறார்கள், நாங்கள் அவர்களுக்கு சைக்கிளை அனுப்புகிறோம். எங்களிடம் அவர்கள் 100 மற்றும் 200 வசூலிக்கின்றனர்."

"இந்தியா, பிரேசில் அதிக கட்டணம் வசூலிக்கின்றன. அவர்கள் எங்களுக்கு கட்டணம் விதிக்கின்றனர், அது பரவாயில்லை, ஆனால் நாங்களும் அவர்களுக்கு அதே கட்டணத்தை வசூலிக்க போகிறோம்," என்று தெரிவித்தார்.

## புற்றுநோய் பாதிப்பால் உயிரிழந்த பிரபல நடிகை!




பிரபல ஹாலிவுட் நடிகை டயேன் டெலனோ புற்று நோய் பாதிப்பு காரணமாக இன்று உயிரிழந்தார். நார்தன் எக்ஸ்போஷர், பாப்புலர் மற்றும் தி விக்கர் மேன் போன்ற தொடர்களில் இவர் நடித்த கதாபாத்திரம் மிகவும் பாராட்டப்பட்டது. இந்த நிலையில், 67 வயதான டயேன் தனது இல்லத்தில் உயிரிழந்ததாக டெட்லைன் செய்தி வெளியிட்டுள்ளது.

1990 முதல் 1995 வரையிலான காலக்கட்டத்தில் ஆறு சீசன்கள் வரை வெளியான நார்தன் க்ஸ்போஷர் தொடரில் டெலானோ பார்பரா செமான்ஸ்கி என்ற கதாபாத்திரத்தில நடித்தார். இது இவருக்கு புகழைத் தேடிக் கொடுத்தது. இதுதவிர இவர் நடித்த பல்வேறு கதாபாத்திரங்கள் பெரும் வரவேற்பை பெற்றன.

1957, ஜனவரி 29ம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸ்-இல் பிறந்த டெலனோ தனது ஆறு வயது முதலே நடித்து வந்தவர் ஆவார். தனது திரைப்பயணத்தில் இவர் ஏராளமான தொடர்களில் நடித்துள்ளார். நடிப்பு மட்டுமின்றி பல்வேறு தொடர்கள் மற்றும் திரைப்பட கதாபாத்திரங்களுக்கு இவர் குரல் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எதிரிகள் என நினைத்து ரஷ்ய வீரர்களை கொன்று குவித்த வடகொரிய வீரர்கள்!

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா 2022-ம் ஆண்டு பெப்ரவரியில் படையெடுத்தது. இந்நிலையில், போர் தொடங்கி 2 ஆண்டுகளை கடந்த நிலையில் இருதரப்பிலும் அமைதி பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது.

உக்ரைனுக்கு எதிரான போரில் 10 ஆயிரம் வடகொரிய வீரர்களை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டு உள்ளது என அமெரிக்கா குற்றச்சாட்டாக கூறியிருந்தது. அது உண்மை என அடுத்தடுத்து தெரிய வந்துள்ளநிலையில், இந்த போரில் ரஷ்ய படை வீரர்களை, அதன் கூட்டணி நாடான வடகொரியாவின் வீரர்களே தவறான புரிதலால் சுட்டு கொன்ற அவலம் நடந்துள்ளது.

குர்ஸ்க் பகுதியை ஆக்கிரமிப்பு செய்யும் முனைப்பில் ரஷ்ய படைகள் ஈடுபட்டு இருந்தன. ஆனால், அதனால் எதிரி படைகளை எளிதில் வெற்றி கொள்ள முடியவில்லை.

இந்நிலையில், ரஷ்யா படையினரின் உத்தரவுகளை சரியாக புரிந்து கொள்ள முடியாத சூழலில் வடகொரியா வீரர்கள் இருந்துள்ளனர். இதனால், ரஷ்ய வீரர்களை தவறுதலாக எதிரிகள் என அவர்கள் நினைத்து துப்பாக்கி சூடு நடத்தினர். இதில், ரஷ்ய வீரர்கள் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ரஷ்யாவுக்கு இந்த ஒரு விடயம் மட்டுமே முக்கிய சவால் என்றில்லாமல், உக்ரைனுக்கு வடகொரிய வீரர்களை அழைத்து வந்ததில் பல சவால்களை சந்தித்து வருகிறது. அதில், உத்தரவுகளை வீரர்கள் சரியாக புரிந்து கொள்ளாத இந்த விடயமும் அடங்கும்.

## ஆற்றில் கவிழ்ந்த படகு உயிரிழப்பு 25 ஆக பதிவு!

மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு காங்கோ. அந்நாட்டின் மைடொபி மாகாணத்தில் பெமி என்ற ஆறு பாய்கிறது.

இந்நிலையில், மைடொபி மாகாணம் இங்கான்கோ நகரில் இருந்து அண்டை நகருக்கு பெமி ஆற்றில் படகு ஒன்று புறப்பட்டது. அந்த படகில் 100க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.

ஆற்றில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றியதால் பாரம் தாங்காமல் படகு ஆற்றில் கவிழ்ந்தது. குறித்த சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் ஆற்றில் தத்தளித்தவர்களை மீட்டனர். ஆனால், மேலும் சிலரின் நிலை இதுவரை தெரியாததால் மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்ட பெண் உடல் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்!

மருத்துவத் துறையில் செயற்கை உறுப்புகள் மற்றும் விலங்குகளின் உறுப்புகளை மனிதர்களுக்கு பொருத்தி சிகிச்சை அளிக்கும் முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதில் மரபணு மாற்றப்பட்ட பன்றியின் உறுப்புகளை பரிசோதனை செய்து வருகின்றனர். ஏற்கனவே மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகம் 2 பேருக்கு பொருத்தப்பட்டது.

இந்த நிலையில் 3-வது நபராக அமெரிக்காவின் அலபாமாவைச் சேர்ந்த டோவானா லூனி (வயது 53) என்ற பெண்ணுக்கு, மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சையினை பன்றியின் சிறுநீரகம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வரும் அலபாமா பல்கலைக்கழக மருத்துவர்கள் வெற்றிகரமாக செய்தனர்.



இதனையடுத்து அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

இதற்கிடையே பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்ட டோவானா லூனி உடல்நிலையில் நன்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாகவும், அவருக்கு பொருத்தப்பட்ட சிறுநீரகம் நன்கு வேலை செய்வதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சில பரிசோதனைகளுக்காக அவர் தற்காலிகமாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இன்னும் 3 மாதங்களில் பூரண குணமடைந்து அவரது சொந்த ஊருக்கு திரும்புவார் என்று தெரிவித்துள்ளநிலையில் இதற்கு முன்பு பன்றியின் சிறுநீரகம் அல்லது இதயம் பொருத்தப்பட்ட 4 பேரும் இரண்டு மாதங்களுக்குள் உயிரிழந்தனர். ஆனால் லூனியின் உடல்நிலையில் வேறு பாதிப்பு இல்லை எனவே, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் புதிய நம்பிக்கை பிறந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## நிசாம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபாநாயகர் மருத்துவர் ஜகத் விக்ரமரத்ன முன் னிலையில் இன்று புதன்கிழமை காலை அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அவர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரவேட்டிலும் கையொப்பமிட்டார். (ஐ)

## கெஹெலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தர விட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்லவின் நிலையான வைப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளையே முடிக்கி வைக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இரண்டு கணக்குகளிலும் தற்போதைய வைப்புத் தொகை சுமார் ஷரூபா 200 இலட்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53 (1) ஆவது பிரிவின்படி நேற்று முதல் இந்தத் தடை உத்தரவு நடைமுறைக்கு வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த இடைநீக்க உத்தரவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் மேலும் நீடிப்பதற்கு ஆணைக்குழு எதிர்பார்க்கிறது.

கடந்த காலங்களில், இந்த விசாரணைகள் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர், அவரது மனைவி மற்றும் உறவினர்கள் பலரின் சொத்துக்களை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-05)

## குற்றச்சாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாமல் ராஜபக்ச சவால் விடுத்துள்ளார். அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றில் உரையாற்றிய போது, நாமல்ராஜபக்ச, குளிஷரூட்டப்பட்ட அறையில் பரீட்சை எழுதியதாகவும், பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வழங்கப்பட்டதாகவும், இணைய வசதியுடன் கூடிய கணனி வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார். அத்துடன், முழு அரசியல் பலத்தைப் பயன்படுத்தி சட்டத்தரணியானார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்த அவமதிப்பு நாமல் ராஜபக்சவை இலக்காகக் கொள்ளவில்லை. இலங்கையின் முழுச் சட்ட அமைப்பையும் குறிவைத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ச நீதி அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தான் குளிஷரூட்டப்பட்ட அறையில் தனியாகப் பரீட்சை எழுதியமை நிரூபிக்கப்பட்டால் சபையிலிருந்து விலகுவதாகவும், அதனை நிரூபிக்கத் தவறினால் அமைச்சர் வசந்த சமரசிங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார். (ஐ-05)

## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் இன்று சிறப்புரை ஆற்றிய சமயத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், 2025 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி ஆரம்பிக்கப்படும். திட்டமிடப்பட்ட முறையில் கட்டமைக்கப்பட்ட

பொறிமுறை ஒன்றினூடாக வாகன இறக்குமதி மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது.

வாகன இறக்குமதி மற்றும் வர்த்தகத் துறையை நீண்ட காலத்திற்கு மூட முடியாது. பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் பஸ் வண்டிகள் மற்றும் சிறப்பு சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் கடந்த 14 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2025 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ள நிலையில், பொருட்களை ஏற்றி இறக்கல் மற்றும் தனியார் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தினால் இலங்கைக்கு அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்படாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, மத்திய வங்கியுடனான நீண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், வாகனங்களின் இறக்குமதி மற்றும் பொருளாதாரத்தின் மீதான தாக்கம் காரணமாக செலவிடப்படும் டொலர்களின் தொகையை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. எனவே எமது பொருளாதாரத்தை வலுப்படுத்த, வாகன இறக்குமதியை மீண்டும் தொடங்க வேண்டும். என றார். (ஐ-07)

## தமிழர்களுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், தன்னுடைய கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காவிடின் தான் சபைக்கு வராமல் வீட்டிலேயே இருந்திருக்கலாமே என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர்களாகத் தொண்டர் அடிப்படையில் பணிக்குச் சேர்க்கப்பட்ட சுமார் 170 பேருக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி பெரும் அநீதி இழைத்துள்ளார் என்று குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, அங்கு நடக்கின்ற அட்டூழியங்களைத் தட்டிக் கேட்பதற்கு முடியாமல் இருப்பதைச் சபையில் மனவருத்தத்துடன் வெளிப்படுத்தினார்.

அங்கு பணியாற்றும் தொண்டர்கள் மற்றும் அங்கு சிகிச்சைக்காகச் சென்ற பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளைப் பட்டியலிட்டுக் காட்டிய அவர், நாடாளுமன்றத்திலும் அவற்றைச் சமர்ப்பித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் மீதும், வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் கடுமையாகத் தாக்கி பேசினார்.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல இன்னல்களைச் சந்திப்பதாகவும், அவர்கள் பல முறைப்பாடுகளை தன்னிடம் வழங்கி தீர்வு பெற்றுத் தருமாறு கோரியதாகவும் எனவே இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியை அந்த பதவியில் இருந்து அகற்றுமாறும், அவர் கடந்த அரசாங்க காலத்தின் போது ஒரு அமைச்சருடைய வலது கையாக செயற்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தனதுரையில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பேசிக் கொண்டிருந்த வேளையில், இடைக்கிடை குறுக்கிட்ட சபாநாயகர், "சபையில் உரையாற்றுவதாகச் சமர்ப்பித்த விடயங்கள் பற்றி மட்டும் உரையாற்றுமாறு பல முறை எச்சரிக்கை விடுத்தார்.

எனினும், அதனைக் கருத்திற் கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, மக்கள் நலன் சார்ந்து தன் மீது நீதி மன்றங்களில் 19 வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும், வழக்குகள் என்ன, தமிழ் மக்களுக்காக நெஞ்சில் குண்டடி படவும் தயாராகவே இருக்கிறேன் எனவும் குறிப்பிட்டார்.

மீண்டும் சபாநாயகரால் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு மீண்டும் எச்சரிக்கை வழங்கப்பட்டபோது, "என்னால் சபையில் கருத்துக்களை முன்வைக்க முடியவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாது என்றால் கூறுங்கள். நான் சபைக்கு வரவில்லை.. வீட்டில் இருக்கின்றேன்" என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பேசிக்கொண்டிருந்த போது குறுக்கிட்ட சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்னாயக்க "நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அவர்களே நீங்கள் கிண்ணியாவில் ஒரு அரசியல் மேடையில் இருந்தீர்களே? யாருடைய அரசியல் மேடை அது? யாருடைய மேடையில் நீங்கள் இருந்தீர்கள்? என்று நகைச்சுவையான தொனியில் கேட்ட போது சபையில் இருந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நகைத்தனர். இதனையடுத்தே தனது வாக்குவாதத்தை தவிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அமைதியானார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா உரையாற்றிய சமயத்தில், நாடாளுமன்ற அமர்வுக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைச் செவிமடுத்த வண்ணமிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னதாக தெரிவித்த கருத்தைத் தேசிய மக்கள் சக்தி தற்போது மீளப் பெறுமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடன் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டால், ஏனைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சியாக இருக்கும்போது தேசிய மக்கள் சக்தி கூறியது. எனினும், தற்போது, இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ரணில் விக்ரமசிங்க இணைக்கம் தெரிவித்த எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்தியா தொடர்பிலும், எட்கா தொடர்பிலும் முன்னதாக தெரிவித்த கருத்தைத் தேசிய மக்கள் சக்தி தற்போது மீளப் பெறுமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்,

"உள்நாட்டில் மின்சக்தி உற்பத்தி செய்வதாகவும் மேலதிக மின்சக்தியை பிம்ஸ்டெக் அமைப்பின் பொருளாதார ஒத்துழைப்புடன் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் நாம் முன்னதாக கூறியிருந்தோம். இதனூடாக, இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

அதனை விடுத்து, நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு உடன்படிக்கையையும் இந்தியாவுடன் நாம் கைச்சாத்திடவில்லை. இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் மின்சக்தி தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்கொண்டு செல்லப்படும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நாட்டை காட்டிக் கொடுக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடப்படவில்லை" என்றார். (ஐ-05)

# அதிகரித்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம்



(கொழும்பு, டிச 18)

2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 வீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளி விபரங்கள் திணைக்கள அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

நிலையான விலையில் (2015) 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2,987,544 மில்லியன் ஷரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 3,151,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5.5 சதவீத நேர்மறையான வளர்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம், தற்போதைய விலைகள் மற்றும் நிலையான விலையில் (2015) உற்பத்தி அணுகுமுறையின் கீழ் 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான (ஜூலை 01 முதல் செப்டம்பர் 30 வரை) மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பிற பொருளாதாரக் குறிகாட்டிகளை கணித்து வெளியிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய பொருளாதார நடவடிக்கைகள், தொழில்துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவை பொருளாதார நடவடிக்கைகள் முறையே 3.0 சதவீதம், 10.8 சதவீதம் மற்றும் 2.6 சதவீதம் நேர்விகித வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2024 இல் வெளியிடப்பெற்றது.